Mankerai Middle School

* 67 *Q.*—DR. T. R. JANARTHANAM (on behalf of Thiru **P. R.** Thomas) : Will the Hon. the Minister for Education be **pleased to**

(*a*) whether it is a fact that the Midday Meals Scheme **grant** for Mankerai Middle School in Tholaiyyavattam Panchayat **Union,** Kanyakumari district, for a period of six months from **1st January** 1982 to 30th June 1982 has not yet been sanctioned ; and

(*b*) if so, the action taken to disburse the amount ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) 1—7—1982 முதல் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் தொடக்கப் பள்ளிகளில் நண்பகல் உணவு வழங்கும் செலவு முழுவதையும் அரசே ஏற்று வருவதால் 1—7—1982க்கு முந்திய காலங்களுக்கு உள்ளாட்சி மன்றங்கள் 5 காசு பங்குத் தொகை வகையில் தரவேண்டிய நிலுவைத் தொகைகள் எவையும் இருந்தால் அவற்றை (மைய சமயற்கூடங்கள் செயல்பட்ட செங்கல் பட்டு, வடாற்காடு, தென் ஆற்காடு மாவட்டப் பகுதிகளைத் தவிர பிற பகுதி களில்) தரவேண்டியது இல்லை என்று 20—12—1982 அன்று அரசு பொது வான ஆணை ஒன்றை வெளியிட்டுள்ளது. எனவே கேள்வியில் குறிப்பிட் டுள்ள நிலுவைத் தொகையும் கொடுக்கப்படத் தேவையில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறை வேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு, இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிடப்பட்டு தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1984) மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.